**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**அசல் வழக்கு எண்.244/2018**

**இ.ம.எண்.10/2026**

1) ஆறுமுகம்

2) பழனிச்சாமி (எ) முருகேசன்

3) பொன்னம்மாள்

4) சரசு

5) மணி (எ) மாரியப்பன்

6) கண்ணதாசன்

7) ரத்தினம்

8) தனம்

9) லட்சுமி **...மனுதாரர்கள்/2 முதல் 10 வாதிகள்**

**/எதிர்/**

1) ரவிச்சந்திரன் **...1 ம் எதிர்மனுதாரர்/வாதி**

2) செல்வராஜ் **...2 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி**

இம்மனு எனது முன்னிலையில் கடந்த 26.02.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.I.முகமது ஜாபர் சேட் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.செல்வநன்மாறன் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18, விதி 17 உடனிணைந்த பிரிவு 151ன் கீழ் மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சி எண்.3யை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டி 2, 3 மற்றும் 5 முதல் 10 வரையான பிரதிவாதிகள்/மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் மனுவின் சுருக்கம்:**

**2)** மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் 6ம் பிரதிவாதியாவார். மற்ற மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்காகவும் சேர்த்து மனுதாரர் மேற்படி அசல் வழக்கை எதிர்கொண்டு நடத்தி வருகிறார். எதிர்மனுதாரர்/வாதி, மனுதாரருக்கு எதிராக தாவா பரிகாரம் கேட்டு, மேற்படி அசல் வழக்கை தொடர்ந்துள்ளார். அதன் பேரில், மேற்படி அசல் வழக்கு இன்று பிரதிவாதி தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்த நிலையில், பிரதிவாதிகளின் வழக்கை மேற்படி அசல் வழக்கில் நிரூபணம் செய்யும் பொருட்டு பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய பி.வா.சா.3 சாட்சியை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டியுள்ளது. பி.வா.சா.3யை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால் இம்மனுவானது மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரர்களுக்கு ஏராளமான கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்டமும், நஷ்டமும் ஏற்படாது. அதுவே இயற்கையின் நியதியாகும். எனவே, இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரையின் சுருக்கம்:</u>**

**3)** இம்மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். மேற்படி அசல் வழக்கானது, பிரதிவாதி தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், கால விரையம் ஏற்படுத்துவதற்காக மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள காரணங்கள் சட்டத்தின் பார்வையில் ஏற்கத்தக்கதல்ல. அதையும் மனுதாரரே சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

**4)** மனுதாரர் தரப்பில், ஏற்கனவே கடந்த 27.01.2026 அன்று கடவூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து நில அளவையர் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளார். மேலும், தாவா தொடர்பான ஆவணங்களும் அவர் மூலமாக முன்னிலைபடுத்தப்பட்டன. தற்போது மனுதாரர் மீண்டும் அதே மனுவை அதே பரிகாரம் கோரி, உள்நோக்கத்தோடு தாக்கல் செய்துள்ளார். மனுவில் குறுந்தலைப்பு, பெருந்தலைப்பு சரியல்ல. மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. எனவே, இம்மனுவானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது ஆகும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

**5)** மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**6)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியமும் இல்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**தீர்வு:**

7) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்கையில், மேற்படி அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா 'ஆ' அட்டவணை சொத்தான பாதையில் வாதிக்கு பாத்தியமும், உரிமையும் உள்ளது என்று விளம்புகை செய்திட விளம்புகை பரிகாரத்திற்காகவும், மேலும் தாவா 'ஆ' அட்டவணை பாதையை வாதி பயன்படுத்துவதை பிரதிவாதியோ, அவரது ஆட்களோ தடை இடையூறு செய்யாமல் இருக்க நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டியும், மேற்படி அசல் வழக்கானது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

8) மேலும், வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்கையில், மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், ஏற்கெனவே 2, 3 மற்றும் 5 முதல் 10 வரையான பிரதிவாதிகளால் இ.ம.எண்.9/2025 என்ற மனுவானது அனுமதிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு சாட்சிக்காக அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.3யை இந்நீதிமன்றத்தில் முழுமையாக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் பி.சா.ஆ.20, பி.சா.ஆ.21 மற்றும் வா.சா.ஆ.11 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், அதனைத் தொடர்ந்து, பி.வா.சா.3ன் விசாரணை முடிவடைந்த நிலையில், மேற்படி அசல் வழக்கில் 2, 3 மற்றும் 5 முதல் 10 வரையான பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், இம்மனுவானது மேற்கொண்ட பிரதிவாதிகள்/மனுதாரர்களால், பிரதிவாதிகளின் தரப்பு சாட்சியான பி.வா.சா.3யை மீண்டும் அழைத்து விசாரணை செய்யக் கோரி அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9)** மனுதாரர்கள் தரப்பில், பி.வா.சா.3 சாட்சியை மேற்படி அசல் வழக்கில் மீண்டும் அழைப்பது நீதியின் பொருட்டும், நியாயத்தின் பொருட்டும் அவசியமானது என்றும், மேலும் பிரதிவாதிகளின் கட்சியை நிரூபணம் செய்ய பி.வா.சா.3யை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டியது அவசியமும், நியாயமும் என்றும் கூறி இம்மனுவை அனுமதிக்க வேண்டி வாதிடப்பட்டது. மாறாக, எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவானது, பிரதிவாதிகள் தரப்பில் வேண்டுமென்றே கால விரையம் செய்யும் நோக்கத்தோடு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் பி.வா.சா.3 சாட்சி ஏற்கெனவே இந்நீதிமன்றத்தால் அழைக்கப்பட்டு முழுமையாக சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், கால விரையம் ஏற்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், இம்மனுவில் எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறும் கூறி வாதிடப்பட்டது.

**10)** வழக்கு கோப்புகளையும், இரு தரப்பு வாதங்களையும் கவனமுடன் பரிசீலனை செய்கையில், தாவா 'அ' அட்டவணை சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா 'ஆ' அட்டவணை சொத்தானது, தாவா 'அ' அட்டவணை சொத்திற்கு வாதியால் பல வருட காலங்களாக பயன்படுத்தி வரப்பட்ட பாதை என்றும், தாவா 'ஆ' அட்டவணை சொத்தில் வாதிக்கு பாதை உரிமையுள்ளது என்றும், அதை பிரதிவாதி இடையூறு செய்வதாகவும் கூறி மேற்படி அசல் வழக்கானது விளம்புகை பரிகாரத்திற்காகவும், நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்கும் வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக தெரிகிறது. இந்நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.3 சாட்சியாகிய தரகம்பட்டி நில அளவையரை அழைத்து அவர் மூலம் தாவா சொத்து சம்மந்தமான Topos Sketch மற்றும் 'அ' பதிவேடு ஆகியவற்றை

பொறுத்து சாட்சியம் அளிக்க பிரதிவாதி தரப்பில் இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி இடைக்கால மனுவானது இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டதன் பேரில் பி.வா.சா.3 அழைக்கப்பட்டு, பி.வா.சா.3 முதல் விசாரணையில் மேற்படி தாவா சொத்திற்குரிய Topos Sketch ஆனது பி.சா.ஆ.20 ஆகவும், மேற்படி தாவா சொத்திற்குரிய 'அ' பதிவேட்டின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.21 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**11)** மேலும், பி.வா.சா.3 குறுக்கு விசாரணையில், வாதி தரப்பில் வா.சா.ஆ.11 ஆவணமாகிய தாவா சொத்தில் நில புல வரைபடத்தின் கணினி நகலானது குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்கும் நிலையில், மேற்படி பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.3ன் முதல் விசாரணையும், குறுக்கு விசாரணையும் கடந்த 27.01.2026ம் தேதி முழுமையாக முடிந்துவிட்டது என்பதை அறிய முடிகிறது. மேலும், மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், இம்மனுவானது மேற்படி அதே பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.3யை மீண்டும் அழைக்கக் கோரி பிரதிவாதிகள்/மனுதாரர்களால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**12)** இவ்வாறு இருக்கும் நிலையில், இரு தரப்பினர்களுக்கும் அவரவர் கட்சியை நிரூபணம் செய்ய சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், போதுமான வாய்ப்புக்கள் அளித்து நிரூபணம் செய்வதற்கு தகுந்த வாய்ப்புகள் அளிக்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், தாவா சொத்தில் 'ஆ' அட்டவணை சொத்தாகிய பாதையை வாதி பன்னெடுங்காலமாக வசதி உரிமையாக பயன்படுத்தி வருவதாக வாதி தரப்பில் கூறியுள்ள நிலையில், அதனை மறுத்து மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் தாவா 'ஆ' அட்டவணை சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், அவ்வாறான பாதை எதுவும் பூஸ்துதியில் இல்லை என்றும், வாதி கூறியபடி வாதி

தாவா 'ஆ' அட்டவணை சொத்தை பாதையாக எதுவும் பயன்படுத்தி வரவில்லை என்றும் கூறி எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கையில், மேற்படி எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை நிரூபணம் செய்யும் சட்டச் சுமையானது, பிரதிவாதிகளை சாரும் என்பதால் பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட பி.வா.சா.3யை மீண்டும் அழைத்து பிரதிவாதி தரப்பு கட்சியை நிரூபணம் செய்ய பிரதிவாதிகளுக்கு தகுந்த வாய்ப்புகள் அளிக்க வேண்டுமென்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், இம்மனுவை அனுமதிக்காவிட்டால் வாதியை விட பிரதிவாதிகளுக்கே அதிகப்படியான கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், இம்மனுவை அனுமதிக்கும் பட்சத்தில், எதிர்மனுதாரர்/வாதிக்கு மேற்படி பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.3யை அனைத்து வகையிலும் குறுக்கு விசாரணை செய்து வாதி கட்சியை நிரூபணம் செய்யவும் வாய்ப்பும் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**முடிவாக,**

மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.03.10 14:05:32 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.03.10 14:05:38 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**